புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுர் ஆண்டு 2056 • மார்ச் 13, 2025 • புரட்சி 25 • முழக்கம் 9 • விலை ரூ.3.00

## சடலங்களை இடுகாடு வரை சுமந்து செல்கிறார்கள்

## “மரபுகளைத் தகர்க்கும் திவிக பெண்கள்”

தமிழ்நாட்டில் பெரியாரியப் பெண்கள் பண்பாட்டு புரட்சிகளை முன்னெடுத்து வருகிறார்கள். இந்து ஆங்கில நாளேடு இதை சுட்டிக்காட்டி செய்தி ஒன்றை வெளியிட்டு இருக்கிறது. சேலம் மாவட்டத்தில் இறந்தவர்களின் சடலங்களை திராவிடர் விடுதலைக் கழகத்தைச் சார்ந்த பெண்கள் இடுகாடு வரை சுமந்து சென்று எந்த வித சடங்கு சம்பிரதாயம் இன்றி உடலை அடக்கம் செய்து வருகிறார்கள். பெண்கள் சுடுகாட்டுக்கு போவதே சமூகம் தடைச் செய்து உள்ளது.



தடையை தகர்த்து சேலம் மாவட்டத்தில் கடந்த 15 ஆண்டுகளாக 100-க்கு மேற்பட்ட சடலங்களை பெண்களே சுமந்து சென்று இறுதி நிகழ்வுகளை செய்துள்ளனர் என்று இந்து ஆங்கில நாளேடு செய்தி வெளிட்டுள்ளது. (மார்ச் 10, 2025).

பெரும்பாலான மதங்கள் பெண்களை சுடுகாடு செல்வதற்கு அனுமதிப்பதில்லை. தங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் மரணத்தில் கூட இடுகாடு செல்ல முடியாது. ஆனால் சேலம் மாவட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பெண்கள் சடலங்களை சுடுகாடு சுமந்து சென்று மத மரபுகளை உடைத்து இருக்கிறார்கள்.



Defying tradition, women bury the dead in Salem district

According to Dravidar Viduthalai Kazhagam president Kolathur Mani, the women, who are all members of the organisation, have buried 100 bodies across Tamil Nadu in the last 15 years. After burying a body, they also raise slogans against the concept of next birth or heaven and hell

இந்த தடையை உடைப்பது எங்களுடைய இயக்கம் தான் வெளிக்காட்டி செயல்பட்டு வருகிறது, என்று திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி கூறினார். 2004 ஆண்டு என்னுடைய உறவினர் இறந்த போது இறந்தவரின் மகளை சுடுகாடு சென்று தீ மூட்டுவதற்கு நாங்கள் ஊக்குவித்தோம்.

பின்னர் 2013 -ல் என்னுடைய தாயார் மறைந்த போது எனது தங்கையை சிதைக்கு தீ மூட்ட செய்தோம். இடுகாட்டில் எவ்வித மூடச் சடங்குகள் இன்றி சடலங்கள் எரியூட்டப்பட்டன என்று கொளத்தூர்மணி கூறினார்.

சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக மகளிரணி அமைப்பாளர் ஓ.சுதா இது பற்றி கூறுகையில் “ 2013 ஆண்டில் இருந்து நான் இதைச் செய்து வருகிறேன் என்னுடைய கணவரும் திவிக உறுப்பினர் இதற்கு உறுதுணையாக இருக்கிறார். ”கழக தோழர்கள் இல்லங்களில் இறப்பு நிகழும் போது எல்லாம் பெண்கள் தான் சடலங்களை சுமந்து செல்வோம் இதை பார்த்த இயக்கத்தை சாராத பெண்களும் எங்களுடன் இடுகாடு வரை வருவதுண்டு” என்றார்.

கழகத்தின் மகளிரணியை சேர்ந்த சி.சரஸ்வதி 2010 -ம் ஆண்டு முதல் இந்த பண்பாட்டுப் புரட்சியை செய்து வருகிறோம். எங்கள் அமைப்பை சார்ந்த காயத்திரி, கோமதி ,அழகேஸ்வரி, இந்திராணி ஆகியோருடன் இணைந்த இதைச் செய்கிறோம். கடந்த 15 ஆண்டுகளாக எங்களது பெண்கள் குழு கொளத்தூர், கரூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் சடலங்களை அடக்கம் செய்துள்ளது.

மற்றொரு பெண் தோழர் சுதா கூறுகையில் இதற்காக குடும்பத்தில் கடும் எதிர்ப்புக்களை சந்திக்க நேர்ந்தது என்கிறார் என்னைடைய தந்தை எங்கள் வீட்டிற்கு வந்தால் சில நிமிடங்கள் மட்டும் பார்த்துவிட்டு திரும்பி விடுவார். எங்கள் வீட்டில் தண்ணீர் கூட குடிக்க மாட்டார். என்னுடைய சகோதரர் என்னுடன் பேசுவதையே நிறுத்தி விட்டார். ஆனாலும் நான் பெரியார் கொள்கை உறுதியுடன் செயல்படுத்தி வருகிறேன் என்றார்.

மரண செய்தி வந்த உடனேயே எங்களுடைய கழக பெண்கள் அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை தொடங்கி விடுவார்கள் என்று கொளத்தூர் மணி கூறினார். இறந்தவரின் குடும்ப உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிந்தால் நாங்கள் கட்டாயப்படுத்துவதில்லை என்று கூறிய கொளத்தூர் மணி, **சடலங்களை எரியூட்டிய பிறகு ஆன்மா, மோட்சத்திற்கு எதிரான முழக்கங்களை எழுப்புவோம்.** எங்களுடைய கழக பெண்கள் 100-க்கும் மேற்பட்ட சடலங்களை தமிழ்நாடு முழுவதும் சடங்குகள் இன்றி சுமந்து சென்று அடக்கம் செய்யதுள்ளனர் என்று கூறினார்.

ஆங்கில இந்து நாளேடு மட்டுமின்றி D/W தமிழ், முரசொலி என பல ஊடகங்களில் திராவிடர் விடுதலைக் கழகப் பெண்களின் இந்த பணி செய்தியாக வெளியாகி பலரது கவனிப்பையும் பெற்றுள்ளது.

## பெரியார் பல்கலை.யில் விக்சிட் பாரத்-2047 கருத்தரங்கு

## திராவிடர் விடுதலைக் கழகம் கடும் கண்டனம்



இதுதொடர்பாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி 06.03.2025 அன்று விடுத்துள்ள அறிக்கை:

“மும்மொழிக் கொள்கை, பாராளுமன்ற தொகுதிகள் மறு சீரமைப்பு போன்ற பிரச்சனைகளை ஒன்றிய அரசுக்கு எதிராக தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நிலையில் ஒன்றிய அரசின் திட்டமான ‘விக்சிட் பாரத் வளரும் இந்தியா 2047’ தொடர்பாக சேலம் பெரியார் பல்கலைக்கழகம் வரும் மார்ச் 10 மற்றும் 11–ஆம் தேதி கருத்தரங்கு ஏற்பாடு செய்ததை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

பதிவாளர் தேர்வு, அலுவலர் பதவி உயர்வு, புதிய பணி நியமனம், விதிகளுக்கு புறம்பாக நூலகர், உடற்கல்வி இயக்குநர் நியமனம் போன்ற பி ர ச் ச னை க ளி லி ரு ந் து , ஒன்றிய அரசு தன்னை காப்பாற்றுவதற்காக இந்த கருத்தரங்கினை ஏற்பாடு செய்துள்ள துணைவேந்தர் வரும் மே 19 உடன் பணியிலிருந்து விடுபட உள்ளார். தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளில் இருந்து தப்பிக்கவே இந்த கருத்தரங்கை நடத்த முடிவு செய்துள்ளார்.

ஆ ர் எ ஸ் எ ஸி ன் கூடாரமாக சேலம் பெரியார் பல்கலைக்கழகம் மாறுவதை தமிழ்நாடு அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.”

## உதயநிதி மீது வழக்குத் தொடர தடை!

**உதயநிதி ஸ்டாலினின் சனாதன எதிர்ப்புப் பேச்சுக்கு எதிராக மேலும் வழக்குகள் போடுவதற்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.**

**அதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், “ ‘சனாதன தர்மத்துக்கு ஆபத்து வரும்போதெல்லாம் அவதாரம் எடுத்து வருவேன்’ என்று கீதையில் கிருஷ்ணன் கூறுகிறார். ஆனால் அப்படியெல்லாம் அவதாரம் எடுத்து கிருஷ்ணன் வர மாட்டார், நாம்தான் வழக்கு தொடர வேண்டும் என்று பகவான் கிருஷ்ணனை அவமதித்து சனாதனவாதிகள் நீதிமன்றத்தை அணுகிக் கொண்டிருக்கிறார்கள்.**

**அவர்கள் பார்வையில் இதுவும்கூட கடவுளை அவமதிப்பதுதான். இதற்காகவே சனாதனவாதிகள் மீது வழக்குத் தொடரலாம். இந்துத்துவ அரசியல் மதத்தையும் கடவுளையும் புறந்தள்ளிவிட்டு கூட்டணி அரசியலாக உருவெடுத்து நிற்கிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.**

## தலையங்கம்

# “ஜாதிக்கு ஒரு கோயில் தேவையா?”

**ஆகமக் கோயில்களை பார்ப்பனர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து இருப்பதை எதிர்த்து, பெரியார் இயக்கம் குரல் கொடுத்து வருகிறது. அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் திட்டத்தை தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதவியேற்ற 100-வது நாளில் செயல்படுத்தினார். ஆனாலும் 24 பார்ப்பனரல்லாத அர்ச்சகர்க்கு மேல் நியமனம் செய்ய முடியாமல், நீதிமன்றங்களில் பார்ப்பனர்கள் தடை வாங்கிவிட்டார்கள்.**

**தடையை நீக்க அறநிலையத்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். அறநிலையத்துறை இந்த பிரச்சினையில் ஆர்வம் காட்டாமல் செயல்படுகிறது. பெரியார் நெஞ்சில் தைத்த அந்த முள்ளை அகற்றும் இந்த சமூக மாற்றக் கொள்கையில் அறநிலையத்துறையின் செயல்பாடுகள் கண்டிக்கதக்கவையாகவே இருக்கின்றன.**

**இந்த நிலையில் பல கிராம கோயில்கள் ஜாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றன. அண்மையில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பரத சக்கரவர்த்தி வழங்கியுள்ள தீர்ப்பைப் பாராட்டி வரவேற்க வேண்டும். ‘‘கோயில்களை நிர்வகிக்கும் உரிமையை ஒரு குறிப்பிட்ட ஜாதிகள் கோர முடியாது. கோயில்களை ஜாதி அடிப்படையில் பிரித்துப் பார்ப்பது ஜாதியை நிலை நிறுத்துவதற்கே பயன்படும். ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு வழிப்பாட்டு முறை இருக்கலாம், ஆனால் அதை காரணம்காட்டி, அந்த கோயில் தனது ஜாதிக்கு மட்டுமே உரிமையுடையது என்று கேட்க முடியாது’’ என நீதிபதி தனது தீர்ப்பில் திட்டவட்டமாக தெளிவுப்படுத்தி இருக்கிறார்.**

**பிற்படுத்தப்பட்ட ஜாதியினர் கட்டுப்பாட்டில் உள்ள பல கோயில்களில் பட்டியலின மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் பல இடங்களில் மோதல்கள் ஏற்பட்டு, இந்து சமய அறநிலையத்துறை கோயில்களை மூடும் நிலை உருவாகிறது. பாஜக தலைவர் அண்ணாமலை அண்மையில் கோயில்கள் ஜாதிக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதைப் பேசி இருந்தார். பாஜகவின் இந்துத்துவ அரசியல் ஜாதியை காப்பாற்றுவதற்காகவே இருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.**

**கோயில்களுக்கும் ஜாதிகளுக்குமான உறவு பிரிக்கமுடியாத வகையாகவே இருந்திருக்கிறது. நாடார்கள், வன்னியர்கள், முக்குலத்தோர் என்று ஒவ்வொரு ஜாதியினரும் கோயில்களைக் கட்டி தங்கள் ஜாதிக்கு உரிமை கோரினாலும், குடமுழுக்கு நடத்தவும் சடங்குகள் செய்யவும் பார்ப்பனர்களையே அழைக்கிறார்கள். ஆனால் பல கோயில்களில் பட்டியலின மக்களை அனுமதிக்க மறுக்கிறார்கள்.**

**கோயிலுக்கு உரிமை கொண்டாடும் ஜாதிக்காரர்கள் கோயில் கட்டுமானப் பணியில் தங்கள் ஜாதியினரை மட்டுமே ஈடுபடுத்துக்கிறார்களா? எந்த ஒரு ஜாதியும் சமுகத்தில் தனித்து இயங்க முடியாது என்பதுதான் சமூக வாழ்க்கை. கோயிலுக்கு ஜாதி உரிமை கோருவது போல் மருத்துவர்களும், வழக்கறிஞர்களும், பொறியாளர்களும் தங்கள் ஜாதிக்கு மட்டுமே சேவை செய்வோம் என்று கூற முடியுமா ? அப்படித்தான் கூறுவார்களா?**

**இன்றைய கிராமக் கட்டமைப்பு, ஜாதியை உயிர்த்துடிப்புடன் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறது என்பதே உண்மை. கிராமக் கோயில்கள் திருவிழாவில்தான் கலவரங்கள் பெருமளவில் வெடித்துக் கொண்டிருக்கின்றன. ரேசன் கடைகளைக் கூட தலித் பகுதியில் அமைக்க முடியவில்லை. ஆதிக்க ஜாதியினர் மிரட்டுகிறார்கள்.**

**திண்டுக்கல், கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் தீண்டாமைக் கொடுமைகள் தலைவிரித்தாடுவதை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கழகத் தோழர்கள் கள ஆய்வு செய்து விரிவான பட்டியல் ஒன்றை தயாரித்தார்கள். அந்த பட்டியல் கழகத்தின் சார்பில், தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு நேரில் மனுவாக வழங்கப்பட்டது. திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் உரிமைகளுக்கான திட்டங்கள் கிராமங்களில் உள்ள பெண்களை அதிகாரமயம் ஆக்கி இருக்கிறது என்பது உண்மை.**

**மோதல்களின் எண்ணிக்கை குறைந்தாலும் ஜாதிய வேற்றுமை சமூகத்தில் ஊடுருவி இருக்கிறது. ஜாதி எதிர்ப்புக் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சொல்வதற்கு இயக்கங்கள் தயாராக இல்லை. ஜாதி மோதல்கள் என்று வந்தால் அரசையும் காவல்துறையையும் குற்றம்சாட்டுகிறார்கள். ஆனால் ஜாதியைப் புனிதப்படுத்திக் கொண்டு இருக்கும் கடவுள், மத நம்பிக்கைகளை கேள்விக்குள்ளாக்க தயராக இல்லை. திராவிடர் விடுதலைக் கழகம் கிராமங்களில் இரட்டைக் குவளை முறையை எதிர்த்துப் போராடியது கிராமந்தோறும் ஜாதி எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்புப் பரப்புரையை நடத்தியது. வைக்கம் நூற்றாண்டிலும் கிராமங்களில் நிலவும் தீண்டாமை பட்டியலை தயாரித்தது.**

**தலித் அரசியல் கட்சிகள் ஜாதி எதிர்ப்புக் கருத்தியலை பரப்புவதில் போதுமான அளவில் செயல்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். இந்த பின்னணியில் உயர் நீதிமன்றங்களில் இருந்து வரும் இந்த ஜாதி எதிர்ப்புக் குரலை நாம் வரவேற்க வேண்டும். இதே நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை கிராமத்தில் போக்குவரத்துக்கு இடையூறாக கட்டப்பட்டு இருந்த கோயிலை அகற்ற வேண்டும் என்று ஒரு வழக்கில் தீர்ப்பளித்தார். அந்தத் தீர்ப்பில் ‘‘கடவுள் அங்கும் இங்கும் இல்லாமல் எங்கும் நிறைந்திருப்பார். குறிப்பிட்ட இடத்தில் இருந்தால் மட்டுமே வெளிப்படுத்த முடியும் என்ற அவசியம் இல்லை. சில கடும்போக்களார்கள்தான் மதத்தைப் பயன்படுத்தி மக்களிடையே மோதலை உருவாக்கி வருகிறார்கள்’’ என்று வழங்கிய தீர்ப்பையும் சுட்டிக்காட்ட வேண்டும்.**

# பார்ப்பனர்கள் கூட்டத்தில் நீதிபதிக்கு என்ன வேலை?

*கேரளாவில் நடைபெற்ற பார்ப்பன சங்க மாநாட்டில் கேரள உயர்நீதிமன்ற நீதிபதியும், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியும் பங்கேற்றதைப்போல, பெங்களூருவில் சமீபத்தில் நடைபெற்ற பார்ப்பன சங்க மாநாட்டிலும் கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி கிருஷ்ண தீட்சித் என்ற பார்ப்பனர் பங்கேற்றுப் பார்ப்பனியத்தைத் தூக்கிப் பிடித்துப் பேசி இருக்கிறார்.*

*‘பிராமண மகா சபையின் பொன் விழா’ இரண்டு நாட்கள் நடைபெற்றது. அம்மாநாட்டில் பேசிய அவர், “பிராமணர்கள் என்ற வார்த்தையை ஒரு ஜாதியாக பார்ப்பதைவிட, வர்ணாசிரம தர்மத்துடன் பார்க்க வேண்டும். வேதங்களை தொகுத்த வேதவியாசர், மீனவப் பெண்ணின் மகன்; ராமாயணத்தை இயற்றிய வால்மீகி, எஸ்.சி., அல்லது எஸ்.டி., பிரிவைச் சேர்ந்தவர். ஆனால், இவர்களை கீழானவர்களாக பிராமணர்கள் பார்த்தது இல்லை. ஹிந்து கடவுளான ராமரின் கருத்துக்கள், நம் அரசமைப்பிலும் இடம் பெற்றுள்ளன.” என்று பேசியுள்ளார்.*

*நிகழ்ச்சியில் பங்கேற்ற மற்றொரு நீதிபதி சிறீசானந்தா, “மக்கள் கல்வி, உணவுக்காக போராடும்போது, இதுபோன்ற பிரமாண்ட நிகழ்ச்சிகள் தேவையா என்று விமர்சிக்கின்றனர். இதுபோன்ற நிகழ்ச்சிகளே சமூகத்தினர் இடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதுடன், பிரச்சினைகள் குறித்தும் பேச வைக்கிறது,” என குறிப்பிட்டார். இந்த மாநாட்டில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கரைப் பற்றியும் பேசி இருக்கிறார் ஒரு நீதிபதி.*

*பாஜகவின் ஆட்சி பார்ப்பனர்களுக்குக் கொடுத்திருக்கும் துணிச்சலே, இவ்வளவு வெளிப்படையாக பார்ப்பனர்கள் சங்க மாநாடுகளில் நீதிபதிகள் பங்கேற்கக் காரணமாக இருக்கிறது. இந்த நீதிபதிகளிடம் உச்சநீதிமன்றம் இதுவரை எந்த விளக்கமும் கேட்கவில்லை. இதுபோல திராவிடர் இயக்க மேடைகளில் எதாவது ஒரு நீதிபதி பேசியிருந்தால் இந்த பார்ப்பனக் கூட்டம் அமைதியாக இருந்திருக்குமா? ஊடகங்கள் மவுனித்திருக்குமா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.*

# கழக ஏட்டுக்கு ரூ.15,000 சந்தா!

*தமிழ்நாடு அரசால் தந்தை பெரியார் விருது பெற்ற திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர், புரட்சி பெரியார் முழக்கத்தின் ஆசிரியர் விடுதலை ராசேந்திரன் அவர்களுக்கு, நாமக்கல் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில், மாவட்டத் தலைவர் சாமிநாதன் சந்தித்து பயனாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். அப்போது புரட்சிப் பெரியார் முழக்க சந்தா தொகையாக 15,000 ரூபாயும், கழக வளர்ச்சி நிதியாக 1000 ரூபாயும் வழங்கினார். சந்திப்பின்போது தோழர் சந்திரா, தோழர் பிரகாசு ஆகியோர் உடனிருந்தனர்.*

# ஜாதியைத் தூக்கிட்டு வராதீங்க!

*அமெரிக்காவில் வாழும் குஜராத்தைச் சேர்ந்த டயலன் பட்டேல் என்பவர், “டல்லாஸில் எனது சாதிக்கான (லியுவா படிதார் சமாஜ் சாதி) வாலிபால் போட்டி நடைபெறுகிறது. அமெரிக்காவில் 40,000 பேர் எங்கள் சாதியினர். அதில் 8,000 பேர் இங்கு உள்ளனர். குஜராத்தின் ஒரு சில பகுதியைச் சேர்ந்தவர்கள் நாங்கள். நாங்கள் அனைவரும் அமெரிக்காவில் ஒரே மாதிரியான வாழ்க்கை முறையை கடைபிடிக்கிறோம். நாங்கள் கிராமப்புற அமெரிக்காவில் மோட்டல் அல்லது பெட்ரோல் பம்ப் வைத்து உள்ளோம்” என்று ஜாதிப் பெருமையுடன் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டார்.*

*இந்த பதிவுக்கு அமெரிக்காவில் கடும் கண்டனம் எழுந்துள்ளது. ஜாதிப் பெருமை பேசிய இந்தியர்களை கடுமையாக விமர்சனம் செய்து அமெரிக்கா அரசியல்வாதிகள் போஸ்ட் செய்துள்ளனர். அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் பிராண்டன் கில் செய்துள்ள பதிவில், “அமெரிக்கா என்பது தகுதி வாய்ந்தவர்களுக்கான நாடு. இதற்கு காரணம் நம்மிடம் சாதி அமைப்பு இல்லை. இந்தியா போன்ற வெளிநாட்டில் உள்ள வர்க்க வேறுபாட்டை, ஜாதி வேறுபாட்டை இங்கே இறக்குமதி செய்வதன் மூலம் அமெரிக்காவின் செழுமையையும் சுதந்திரத்தையும் நாம் சீர்குலைக்கப் போகிறோம். முறையற்ற குடியேற்றம் காரணமாக அமெரிக்காவின் தேசிய மற்றும் கலாச்சாரம் பாதிக்கப்படுகிறது” என்று கடுமையாகச் சாடியுள்ளார்.*

# அறிவிப்பு

## வாசகர்களுக்கு அன்பான வேண்டுகோள்

*பெரியார் முழக்க வாசகர்கள் 2024 சந்தாதாரர்களுக்கு வருகிற மார்ச் –31,2025 வரை இதழ்கள் அனுப்பப்படும். 2025 ஆண்டுக்கான சந்தாவை மார்ச் இறுதிக்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

*(குறிப்பு : கடந்த ஆண்டு சந்தாதாரர்களுக்கு பத்திரிக்கை சரிவர கிடைக்கவில்லை என்ற புகார்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டு இருக்கின்றன. அதை இந்த ஆண்டு முழுமையாக சரி செய்துவிட்டோம். இனி இதழ் வாசகர்களுக்கு சரிவர கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.)*

*மேலும் புகார்களுக்கு +91 63697 76351 தொடர்பு கொள்ளவும்.*

# உண்மைக்குப் புறம்பாக விமர்சிக்கும் கயவர் கூட்டம்! பெரியார் மீதான விமர்சனங்களுக்கு பதிலடி

–கொளத்தூர் மணி

சென்னையில் நிமிர்வோம் வாசகர் வட்ட கூட்டத்தில் ஆற்றிய உரையின் தொடர்ச்சி...

அண்ணா ஏராளமான நாடகங்களை எழுதியுள்ளார். முதலில் சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம், இந்து ராஜ்ஜியம் என்றால் எப்படி இருக்கும்? அரசனாக இருந்தாலும் என்பதுதான் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம். சந்திர மோகன் என்பவர் பார்ப்பனர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள் என்று சொல்லிக்கொண்டே இருப்பார் சிவாஜியிடம். ஆனாலும் சிவாஜி அவமானப்படுத்தப்படுவார், என்பதை எல்லாம் எழுதி அது எப்படி இந்த இந்து மத சாஸ்திரங்கள் என்ற பெயரால் அரசனைக் கூட கைப்பாவையாக வைத்திருந்தனர் பார்ப்பனர்கள் என்று சொல்வது தான் அந்த நாடகம்.

அம்பேத்கர் பாகிஸ்தான் பிரிவினை என்ற நூலில் எழுதியுள்ளார். **“எப்படியாவது எந்த வழியிலாவது இந்து இராஜ்ஜியம் அமைந்து விடுமேயானால், அதை விட இந்த நாட்டுக்கு பெரும் கேடு எதுவும் இருக்க முடியாது”.** இந்து இராஜ்ஜியம் என்றால் என்ன அது அமைந்தால் என்ன நிலை என்பதை அழகாக எடுத்துச் சொன்ன நாடகம்தான் ‘சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்’.

அடுத்து நீதிதேவன் மயக்கம் என்ற நாடகத்தை அண்ணா இயற்றினார். இராவணன் வழக்குத் தொடுப்பார், நீதி தேவனிடம் கம்பரைப் பற்றிய வழக்கு. வழக்கு விசாரணை வருகிறது. என்னை இரக்கம் எனும் பொருள் இல்லா அரக்கன் என்று கம்பர் எழுதி இருக்கிறார் என்று இராவணன் முறையிடுகிறார். கம்பரிடம் இதை எல்லாம் சொன்னீர்களா என்று நீதிதேவன் கேட்கிறார். ஆமாம் எழுதி இருக்கிறேன் என்கிறார் கம்பர். ‘கட்டிய மனைவியை இரக்கமில்லாமல் காட்டில் விட்டுச் சென்ற ராமன் ஒழுக்கமானவன், ஆனால் என்னை மட்டும் எதற்கு இப்படி எழுதினார்’ என்று அடுக்கடுக்கான வாதங்களை இராவணன் எடுத்து வைப்பார்.

இப்போது கூட பட்டிமன்றங்களில் தீர்ப்பே சொல்ல முடியாமல் இப்படியும் இருக்கலாம், அப்படியும் இருக்கலாம் என்று பூசி மெழுகி பேசுவது போல்தான் நீதி தேவனே தீர்ப்பு சொல்ல முடியாமல் மயங்கி விழுந்தார் என்று அந்த நாடகத்தை எழுதி இருக்கிறார் அண்ணா.

அடுத்து, சந்திரோதயம் என்றொரு நாடகத்தை அண்ணா எழுதினார். ஆருத்ரா விழாவுக்கு சென்று வந்த பணியாளரிடம், நடராஜர் தரிசனம் எப்படி இருந்தது என்று கேட்டு, அவர் அதை விளக்குவாராம். சந்திரோதயம் நாடகமும் பகுத்தறிவு கருத்துக்களே நிறைந்த நாடகம். அதில்தான் கடவுளை கல் என்று பேச வைத்து மக்களை கைத்தட்ட வைத்தவர் அண்ணா.

### அண்ணாவின் சுயமரியாதை உணர்வு!

அண்ணா ஆட்சிக்கு வந்த பிறகு ஒரு சுற்றறிக்கை வெளியிட்டார். அரசு ஊழியர்கள் தாங்கள் எழுதும் கடிதங்களில் சம நிலையில் உள்ளவர்களுக்கு ***‘Transmitted’*** என்றும், தனக்கு கீழே உள்ளவர்களுக்கு ***‘Directed’*** என்றும் உயர் அதிகாரிகளுக்கு ***‘Submit’*** என்றும் எழுதுவார்கள். வெறும் ‘Submit’ என்று எழுத மாட்டார்கள் I Beg to Submit என்று எழுதுவார்கள். கீழே கடைசியாக ***‘Yours Faithfully, Sincerely’*** என்று எல்லாம் போடமாட்டார்கள் ***‘Yours Obediently’*** என்றுதான் எழுதுவார்கள். ***‘Beg’*** என்ற சொல்லை பயன்படுத்தக் கூடாது, ***‘Submit’*** என்று எழுதுங்கள். ***‘Obediently’*** என்று எழுதக்கூடாது, ***‘Yours Faithfully’*** என்று எழுதினால் போதும் என்று சுற்றறிக்கை அனுப்பினார் அண்ணா.

தன்மானமிக்க ஒருவர் இன்னொருவரிடம் போய் எதுக்கு ‘Beg’ to Submit என்று சொல்ல வேண்டும்? அவர்களும் ஒரு அரசு ஊழியர், நீயும் ஒரு அரசு ஊழியர் என்று வார்த்தையில்கூட சுயமரியாதை உணர்வை ஏற்படுத்தினார் அண்ணா. இது சிறிய செய்தியாக இருக்கலாம். ஆனால் அன்றைக்கு உயர் அதிகாரிகள் எல்லாம் பார்ப்பனர்கள்தான். இதை எல்லாம் யோசித்துதான் அண்ணா வார்த்தைகளை மாற்றினார். சுயமரியாதையை பாதிக்கிற ஒரு சொல்லை அரசாணையின் வழியாக நீக்கினார். இந்த செய்தி சிறியதாக இருந்தாலும் தாக்கம் பெரிது.

சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லும் என்று ஆக்கியது, தமிழ்நாடு என்று பெயர் மாற்றியது, இரு மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தியது என 3 முக்கிய சாதனைகளை செய்திருக்கிறார் அண்ணா. ஒருவேளை ஆங்கிலமும் இந்தியும் அப்போது கற்றிருந்தால் இன்றைக்கு தமிழர்களின் நிலை என்ன என்பதை உங்களின் கற்பனைக்கே விட்டு விடுகிறேன். அண்ணா குறைந்த காலம் தான் ஆட்சியிலே இருக்கிறார். ஆனால் அவர் செய்த பணிகள் முக்கியமானவை.

பெரியாருக்கு இருந்த கோபம் அண்ணா ராஜாஜியிடம் போய் கூட்டணி வைத்து விட்டாரே என்பதுதான். 01.01.1962-இல் அறிக்கை விடுகிறார் பெரியார். புத்தாண்டு செய்தி யாருக்கு எழுதுகிறார் என்றால் பார்ப்பனத் தோழர்களுக்கு என்று எழுதுகிறார். 1957 தேர்தலில் திமுக 15 இடங்களை பெற்று இருந்தது. 1962 தேர்தல் நடக்கவே இல்லை. இந்த நிலையில் அந்த அறிக்கையில் பலவற்றை எழுதுகிறார். **“இந்த நாட்டில் கண்ணீர் துளிகள் (திமுக) ஆட்சிக்கு வந்தாலும் பார்ப்பன எதிர்ப்பு என்ற கைத்தடியை ஊன்றாமல் தமிழ்நாட்டில் நடக்க முடியாது. அதற்கு அவர்கள் எனது ஆதரவு கேட்கலாம், நானும் ஆதரவு அளிக்கலாம். எனக்கு சமுதாயத் துறையில் பார்ப்பனர்களைத் தவிர யாரும் எதிரிகள் இல்லை”** என்று எழுதினார்.

1972-இல் கள்ளக்குறிச்சி உரையில் சொல்லுகிறார் பெரியார். அப்போதுதான் திமுகவில் இருந்து அண்ணா திமுக பிரிந்த நேரம். எம்ஜிஆரைப் பற்றி விமர்சனம் செய்து பேசுகிறார் பெரியார். கீழே இருந்து மக்கள் பல கேள்விகளை முன்வைத்தனர். எல்லாவற்றுக்கும் நிதானமாக பதிலளித்தார் பெரியார். **“நீங்கள் ஆளுங்கட்சியை ஆதரிக்கிறீர்களாமே, ஆளும் கட்சியைத்தான் ஆதரிப்பீங்களாமே”** என்று ஒருவர் கேள்வி எழுப்பினார்.

***“ஆமாம் ஆளும் கட்சியைத்தான் ஆதரிப்பேன். நான் ஒரு கொள்கையை வைத்திருக்கிறேன், ஆனால் தேர்தல் அரசியலில் ஈடுபடுவதில்லை. ஆட்சிக்கு வந்தவர்களை ஆதரித்தால் தானே என்னுடைய கொள்கைகளை சட்டமாக்க முடியும். நான் என்ன வீம்புக்கா கட்சி நடத்துகிறேன்? என் கொள்கைகளை சட்டமாக்க வேண்டும். நான் எம்ஜிஆரை திட்டுகிறேன், இதே எம்ஜிஆர் ஆட்சிக்கு வந்து சமுதாயத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தினால் நான் அவரை முழுமனதோடு வரவேற்கத் தயாராக இருக்கிறேன். என் கொள்கைகள் நடைமுறைக்கு வர வேண்டும் அதற்கு ஆதரிப்பேன். திமுகவை ஆதரித்தேன் அவர்களும் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்”*** என்றார்.



பார்ப்பனர்கள் நம்மவர்களைப் பயன்படுத்திக் கொண்டதற்கு மாறாக, அண்ணா பார்ப்பனர்களைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சிக்கு வந்தார். புராண இதிகாசங்களில் நம்மவர்களை அனுமானாகவும், ராட்சசன் ஆகவும் பயன்படுத்திக்கொண்டு பார்ப்பனர்கள் தங்கள் மேலாதிக்கத்தை நிலை நிறுத்தினார்கள்.

ஆனால் அண்ணா ராஜாஜியை அனுமனாக வைத்துக் கொண்டு ஆட்சிக்கு வந்ததும் இந்த ஆட்சி பெரியாருக்கு காணிக்கை என்று சொல்லி பார்ப்பனர்களைக் கழட்டி விட்டார். திமுக பெருங்காயம் இருந்த டப்பா. இப்போது காலியாக இருக்கிறது கொஞ்சம் வாசனை அடிக்கலாம் ஆனால் பூணூலை பிடித்துக்கொண்டு வாக்குகளை உதயசூரியனுக்கு வாக்குகளை குத்துங்கள் என்றார் ராஜாஜி. அண்ணா ராஜாஜியை குத்தினார் ஆட்சிக்கு வந்த உடனே பெரியாரிடம் சென்று ஆலோசனைகள் கேட்டார். ராஜாஜிக்கு கோபம் வந்தது, **‘தேனிலவு முடிந்தது’** என்று சொன்னார்.

உடனே அண்ணா **“தேனிலவிலேயே எவ்வளவு காலம்தான் இருக்க முடியும்? வாழ்க்கையைத் தொடங்க வேண்டாமா”** என்று பதிலடி கொடுத்தார். இதை வேறு யார் செய்திருக்க முடியும்? பார்ப்பனர்களுக்கு அடிமையாக பழகிப்போன வரலாற்றை கொண்ட நமக்கு பார்ப்பனர்களைப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்து அவர்களை துரத்தி விட்ட பெருமை அண்ணாவுக்கே உண்டு.

பார்ப்பனர் வாழத் தகுதியற்ற நாடு தமிழ்நாடு என்று ராஜாஜி சொன்னார். பெரியார் வழியனுப்புவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று தன் பாணியிலே சொன்னார். இப்படிப்பட்ட ஒரு சமூக மாற்ற வரலாற்றை அண்ணா செய்து காட்டினார். அண்ணா அடித்த அடியில் இந்திய தேசிய கட்சிகள் தமிழ்நாட்டில் எழ முடியாத நிலையில் இருக்கின்றன.

### பெரியார் எதையும் மறைக்கவில்லை

தேசியம் என்பதற்கு நாமெல்லாம் கண்டுபிடித்த வரையறை வேறு, ஆனால் அவர்கள் கண்டுபிடித்த இந்தியத் தேசியம் என்பது வேறு. அதையும் பெரியார் விமர்சனம் செய்துள்ளார். எனக்கு தேசாபிமானம் கிடையாது, தேசாபிமானம் என்பதே பித்தலாட்டம் என்று சொன்னார். உடனே பெரியார் தேசியத்தை விமர்சனம் செய்கிறார் என்று மணியரசன் வகையறாக்கள் குதித்தார்கள்.

பெரியார் எப்போது எழுதினார் தெரியுமா? விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் சொல்லும் தேசியத்தை நம்பாதீர்கள் என்று சொன்னார். அப்போதைய காங்கிரஸில் 90 அயோக்கியர்களும், 10 மடையர்களும் இருந்தார்கள், அந்த பத்து மடையர்களில் நானும் ஒருவன்.

பெரியார் காங்கிரஸில் இருந்து 1925 நவம்பரில் வெளியே வருகிறார். நான்கு மாதங்களுக்குப் பிறகு தமிழுக்கு துரோகமும் இந்தியின் ரகசியமும் என்று எழுதியும் இருக்கிறார். இந்துஸ்தானி என்று சொல்லி முஸ்லிம்களை ஏமாற்றி, இந்தி பிரச்சார சபைகளை தான் திறந்து வைத்தார் காந்தி.

பெரியாருக்கும் மற்றவர்களுக்கும் இரண்டு வேறுபாடு தான் போதிப்போர் ஒருவராகவும் அதை சாதிப்போர் ஒருவராகவும் மற்றொருவர் ஆகவும் இருப்பார்கள். மார்க்ஸ் தத்துவங்களை எழுதினார், நடைமுறைப்படுத்தினார் லெனின். ஏதாவது மாற்றங்கள் இருந்தாலும் சின்ன சின்ன திருத்தங்கள் இருந்தாலும் பெரிய அளவில் விமர்சனம் வராது. பெரியார்தான் தத்துவங்களை வழங்கியவரும், அதை நடைமுறைப்படுத்தியவரும் பெரியாரே. இரண்டும் ஒருவரே முன்னெடுக்கும் போது சிக்கல்கள் வருகின்றன. லட்சியங்கள் வேறு, வேலைத் திட்டம் வேறு. உதாரணமாக சேலத்தில் இருந்து சென்னை வரவேண்டும் என்றால் சென்னை வருவதுதான் என் லட்சியம். ஆனால் விழுப்புரத்தில் நிறுத்தி நீ ஏன் சென்னை செல்லாமல் விழுப்புரம் வந்தாய்? என்று கேட்டால் நான் அப்படித்தான் வந்தாக வேண்டும்.

பெரியார் தன்னோடு மக்களை மக்களையும் உடன் அழைத்துக் கொண்டு தான் பயணிக்கிறார். இலக்கை தெளிவாக அடையாளப்படுத்தியும் காட்டினார். மக்களையும் அடையாளப்படுத்தி கூட்டிக்கொண்டு வர வேண்டிய பணியை சேர்ந்து செய்தார். அப்படி லட்சியத்தை நோக்கி வரும்போது பல்வேறு கேள்விகளை முன் வைத்தார்கள். பெரியார் என் இலட்சியங்கள் என்னுடைய காலத்திற்கு பின்னால் கூட நிறைவேறும் என்று சொன்னார்.

திருமணமே வேண்டாம் என்று சொன்ன பெரியார் அவரே திருமணம் செய்து கொண்டார் என்கிறார்கள். அது லட்சியம், ஆனால் சமுதாயத்தில் மக்களைக் கூடவே அழைத்து செல்லுகிற வேலையையும் பெரியார் செய்தார். எடுத்த உடனே இந்த காரியங்களை செய்தால் மக்கள் புறந்தள்ளி விடுவார்கள். மக்களின் மனநிலையை அறிந்து அதற்கு ஏற்ப தன்னுடைய தத்துவத்தை நடைமுறைப்படுத்தியவர் பெரியார்.

நன்றாக பரிசோதனை செய்பவர்தான் நல்ல மருத்துவர், சரியாக நோயைக் கணித்தால் பாதி மருத்துவம் முடிந்து விட்டது என்பார்கள். நம்மூர் பொதுவுடைமைவாதிகள் கூட கணிக்க முடியாத ஜாதிதான் இந்த நாட்டிற்கு அனைத்திற்கும் தடையாக இருக்கிறது என்று சரியாகக் கணித்தார் பெரியார். அப்போது பெரியாரை முதலாளித்துவ சீர்திருத்தவாதி என்று சொன்னவர்கள் எல்லாம் இப்போது பெரியாரை புரட்சிக்காரர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கவனிக்க தவறி விட்டோம் என்று ஒப்புக் கொள்கிறார்கள்.

*(தொடரும்)*

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மகளிர் தினம் – கழகப் பெண்கள் துண்டறிக்கை பிரச்சாரம்!





மார்ச் 8 உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, திராவிடர் விடுதலைக் கழக சேலம் மாவட்ட மகளிர் அணி சார்பில் மகளிர் தின வாழ்த்துகள் கூறி 2000 துண்டறிக்கைகள் வழங்கப்பட்டது.

08.03.25 அன்று மேட்டூர் அரசு கலைக் கல்லூரி முன்பு கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் சுதா, மேட்டூர் நகரத் தலைவர் மார்ட்டின், தேன்மொழி, முத்துராஜ், இராமச்சந்திரன், கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் விஜயகுமார், கொளத்தூர் நகரச் செயலாளர் அறிவுச்செல்வன் ஆகியோரும், வனவாசி அரசு பாலிடெக்னிக் கல்லூரி முன்பு நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகர், இந்திராணி, நந்தினி ஆகியோர்களும், கொளத்தூர் பேருந்து நிலையத்தில் சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சரசுவதி, தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈசுவரன், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி கிருஷ்ணன், அழகேஸ்வரி, கோமதி ஆகியோர் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு, பொதுமக்களுக்கு துண்டறிக்கைகள், இனிப்புகள் வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தனர்.

08.03.25 அன்று தொடர்ந்து சேலம் மாநகர் சௌடேஸ்வரி மகளிர் கல்லூரி முன்பு சேலம் மாநகரத் தலைவர் மோ.பாலு, செயலாளர் ஆனந்தி, பொருளாளர் பிரபு, அமைப்பாளர் தேவராசன், சுதர்சன் ஆகியோரும், இளம்பிள்ளையில் சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திவ்யா, சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, கோபி, அசோக் ஆகியோரும், மேச்சேரி பேருந்து நிலையத்தில் சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞரணிச் செயலாளர் பிரபாகரன், அமைப்பாளர் சிவ சண்முகம், நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகர் ஆகியோர் மாணவர்களுக்கு, பொதுமக்களுக்கு துண்டறிக்கைகள், இனிப்புகள் வழங்கி மகளிர் தின வாழ்த்துகள் தெரிவித்தனர்.

பள்ளி, கல்லூரி மாணவிகள், பொதுமக்கள் ஆர்வமுடன் துண்டறிக்கையைப் பெற்று பெரியாரும் பெண்ணுரிமையும் பற்றிய செய்தியை படித்தனர். மகளிர் தின நிகழ்வுக்கான பணியை சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா அவர்கள் முன்னின்று நடத்தினார்.







## ஈரோடு வடக்கில் கலந்துரையாடல் கூட்டம்!

மாவட்ட தலைமை அலுவலகத்தில் 2.3.2025 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் தோழர். நிவாஸ் தலைமை வகிக்க மாநில வெளியிட்டுச் செயலாளர் தோழர். இராம. இளங்கோவன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

**கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:**

**தீர்மானம் 1:** கடந்த 22 2.2025 கோபி ஒன்றிய கழகத்தின் சார்பாக நடைபெற்ற ‘பெரியார் எனும் பெரும் நெருப்பு’ கருத்தரங்கு வரவு செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு தோழர்கள் வசம் கணக்கு ஒப்படைக்கப்பட்டது. நிகழ்வை சிறப்பாக நடத்திய தோழர்களுக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது.

**தீர்மானம் 2:** வருகின்ற 16 /3/2025 அன்று தலைமைக் கழக அறிவுறுத்தலின்படி மாநிலங்களில் பல்வேறு பகுதிகளில் இருந்து பரப்புரைப பயணம் தொடங்க இருக்கிறது. அதில் ஒரு பகுதியாக ஈரோட்டில் தொடங்க இருக்கும் பரப்புரைப் பயணத்தில் மாவட்டக் கழகத்தின் சார்பாக கலந்து கொள்வது எனவும், பயணக் குழுவோடு ஈரோடு வடக்கு மாவட்ட கழகத் தோழர்கள் இணைந்து பயணிப்பது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 3:** வருகின்ற 22.03.2025 அன்று மயிலாடுதுறையில் நடைபெற உள்ள பரப்பரைப் பயண நிறைவுவிழா பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகத்தின் சார்பில் வாகன ஏற்பாடு செய்து கலந்து கொள்வது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 4:** வருகின்ற ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் இருந்து வாரந்தோறும் பரப்புரைப் பயணம் நடத்துவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டத்தில் மாவட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## டார்வினி – குமரேசன் இணையேற்பு விழா

09.03.25 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 09.00 மணியளவில் விராலிமலை திருமுருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இணையர்கள் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து தாங்களும் மலர் மாலையை மாற்றிக் கொண்டனர். பால்.பிராபகரன் (பரப்புரை செயலாளர்) மற்றும் துரைசாமி (மாநில பொருளாளர்) அவர்களும் சேர்ந்து கழகக் கொடியினை ஏற்றி விழாவை தொடங்கி வைத்தனர்

சிற்பி பிராஜன் அவர்கள் மந்திரமா?தந்திரமா? நிகழ்வு நடைபெற்றது.

புதியவன் வரவேற்புரை நிகழ்த்தினார்.ம கே பி எம் ஐயப்பன் திமுக மத்திய ஒன்றிய செயலாளர், இளங்குமரன் மேற்கு ஒன்றிய செயலாளர் திமுக, மெடிக்கல் குமார் திமுக மாவட்ட பிரதிநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில பொருளாளர் துரைசாமி தலைமையில் நடைபெற்றது.



கழகத் தலைவர் கொளத்தூர் மணி மணமக்களுக்கு சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார். திராவிட முன்னேற்றக் கழக தென்னலூர் பழனியப்பன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்.

பால் பிரபாகரன் பரப்புரை செயலாளர் திவிக, வீ.சிவகாமி தமிழ்நாடு அறிவியல் மன்றம் தலைவர், சூலூர் பன்னீர்செல்வம் தலைமைக்குழு உறுப்பினர், அய்யனார் தலைமைக்குழு உறுப்பினர், முகில் ராசு மாவட்டத் தலைவர் திருப்பூர் திவிக, மனோகரன் திருச்சி மாவட்ட அமைப்பாளர் திவிக, டார்வின் தாசன் திருச்சி திவிக, கோவிந்தராஜ் வனத்துறை ஓய்வு, திருப்பூர் தோழர்கள் ஐயப்பன், ஸ்ரீஜா, மாரிமுத்து பாண்டியநாதன், முருகேசன் (மதுரை), பாலசுப்பிரமணியம் வையம்பட்டி ஒன்றியம் திவிக உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள். வீ திருப்பூர் மாநகரத் தலைவர் தனபால் நன்றியுரையாற்றினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : March 15, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran